இல க௬ [illegible] நெ க௨

ப்ரஹ்மவித்யா.

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

பிலவஹு ஆடிமீ 1[illegible]

யோகபலப்பிரதர்சனி.

முன்தொடர்ச்சி.

இனி ப்ரகிருதயோகிகள் பெறும் சமாதியின் விஷயத்தைப்பற்றி விசாரிப்பாம். சமாதியில் சேஷ்டையற்றிருத்தலென்பது மூர்ச்சையடைந்தவரும் இறந்தவருமசைவற்றிருத்தல் போலல்ல. அன்றி அதனிலக்கணம் வருமாறு:- ஸமாதியென்பது, ஜீவான்மா பரமான்மா உபாதியற்றுப்பேரானந்தம் பெற்றுநிற்பதும், ஜீவனுக்கு அங்கத்துவமும், உயர்ந்த பதவிகிடைத்தலும், நீங்கியதும், பரமானந்தரூபமுமான அவஸ்தையாம். அவ்வவஸ்தையில் யோகி பிராணவாயுவினசைவற்றவனுயினும் அசைவுறுன். நாசியினுனியில் பார்வையுற்றவனுகையால் அவன் கண் சலிக்காது சிவத்தியானத்தில் லயித்திருப்பான். அத்தகைய யோகியே ஸமாதிபெற்றவனெனப்படுவான். அவன் மனம் சிவத்தியானத்தில் லயிக்கவே ஒன்றையுங்கேளான். ஒன்றையும்பார்க்கான், ஒன்றையும்முகரான், எவ்வகைஸ்பரிசத்தையுமுணரான். இவ்வவஸ்தை ஸமஸ்தகாமனைப்பெற்றவனுக்கே கிடைக்குமன்றி மற்றவனுக்குக்கிடைக்காது. இவ்வனம் புலன்களின் தொழிலடங்கின அவஸ்தையே ஸமாதியெனப்படும். நேதி, தௌதி, வஸ்தி முதலிய ஆறுகன்மங்களால் சரீரசுத்தியானபின், இடை பிங்கலை, சுஷும்னை என்றநாடிகள் சுத்தமானபொழுது, ரேசகம், பூரகம் கும்பகம் என்ற பிராணுயாம பியாசக் கிரமத்தால் நீண்டகாலம் வாயுவை அடக்கு பொழுது அச்சமாதி அவஸ்தையுண்டாகுமாம். அ லல் மனதினசைவடங்கவே விடுபெற விருப்பமுதிக்கு மாம். "ஹிரண்ணியகர்ப்பனே யோகத்தைக் கூறின வர் வேறு புராதனர் யாருமில்லை" எனவியாஸர், யா ஞவல்கியர் முதலாயினேர் பாரதம், தருமசாஸ்திர முதலியவைகளில நிருபித்தபடி இத்தயோகத்தை ஹி ண்ணியகர்ப்பனே கண்டாராதலின் மிகவாப்தனு அவனது கட்டளை பயனுடையதே என்றும், யாவ

[illegible]

அனுஷ்டிக்கவேண்டுமென்றும்வேறெடுத்துக்கூறவேண்டியதில்லை. ஆகவே யோகிகளுக்கு முதலவன் ஹிரணயகர்ப்பனென்றேற்படுகின்றது. பிறகு பார்த்த ஸாரதியான ஸ்ரீபகவானால் 'புத்தகள்த்திலிரகசியமாய் அர்ச்சுனனுக்கும் மற்றுமுத்தவர் முதலியோருக்கும் நிரூபிக்கப்பட்டதென்பது யாவருமறிந்தவிஷயமே' "யோகம் பெறுதவனுக்குப் புத்தியுமில்லை, பாவனையுமில்லை. பாவனைபெறுதவனுக்கு சாந்திகிடைக்காது, சாந்திபெறுதவனுக்கு சுகமேது" என்று கீதையில் ஸ்ரீபகவான் ஸ்பஷ்டமாய்க் கூறினமையால் யோகமில்லாவிடில் புத்திஸ்திரப்படுவதும், பாவனையும் சாந்தியும், சுகமும் கிடைக்காதென்பதும்திண்ணம்.இவ்வளவு நிரூபித்தும்; 'ஹடயோகம் மிக அவசியம்' என சிற்சிலசாமான்னியமனிதரியற்றிய கிரந்தங்களிலிருந்து நிரூபிக்கப்பட்டதேயன்றி அனுசியும் அபௌருஷேயமுமானவேதசம்பிரதாய சித்தமல்ல. இந்தயோகமெனப்பார்ப்போருக்கும் கேட்ப்போருக்குமுண்டாகும் சங்கையை மறுப்பாம். வித்தியாஸ்தானங்களில் வேதங்களே சிறந்தன. அவற்றுள் சம்ஹிதாபாகத்தையதற்குப் பிரமாணமாகக்கொண்டால் கமதாச்சிரமத்திற்குப்பிரதிபந்தம் நேருமாயின் வேதாந்தமெனப்புகழப்பட்ட உபநிடதங்களில் அடிமுதல் முடிவுவரை முக்கியமாய் யோகத்தையே நிரூபிப்பாம். அவ்வுபனிடதங்களாவன (1) கர்ப்போபநிடதம் (2) அமிர்தநாதோபநிடதம்(3) மைத்திராயணி (4) க்ஷுரிகோபநிடதம்(5) தேஜோபிந்தூபநிடதம் (6) நாதபிந்தூபநிடதம்(7) தியானபிந்தூபநிடதம் (8) ப்ரம்மவித்தியோபநிடதம் (9) யோகதத்துவோபநிடதம் (10) திரிசிகப்பிராமணோபநிடதம் (11) யோகசூடாமணியுபநிடதம் (12) மண்டலபிராம்மணோபநிடதம் (13) அத்துவயதாரகோபநிடதம்(14) சாண்டில்யோபநிடதம்(15) யோகசிகோபநிடதம (16) அன்னபூர்ணோபநிடதம்(17) அக்ஷிஉபநிடதம் (18) குண்டிகோபநிடதம் (19) யோககுண்டலிஉபநிடதம் (20) தர்சனோபநிடதம் (21) வராஹோபநிடதம் (22) ஸௌபாக்கியோபநிடதம் (23) ஸரஸ்வதிஉபநிடதம் (24] முக்திகோபநிடதம் இவைகளாம். மற்றும் சுவேதாசுவதரம் முதலிய சிலவுபநிடதங்கள் ஆங்காங்கு யோகத்தை நிரூபிக்கின்றன. வெகுவாய் பாதஞ்சலயோகசாஸ்திரத்திற்கு நூற்றெட்டுபநிடதங்களுக்குள் காலிலொருபாகம் மூலமாமென்பதுகற்றோருணர்ந்தவுண்மை. பாதஞ்சலயோகசூத்திரம், ஞானவாதிட்டம், யோகவாசிட்டம், பாகவதம், புராணங்களில் சூதசங்கிதைமுதலியன. யோகபீஜம்,யோகதா

[illegible]

ராவளி, யோகாகந்தம், யோகசந்திரிகை, யோகஸாரம், ஹடயோகப்பிரதீபிகை, சிவஸம்ஹிதை, சிவஸ்வரோதயம், யோககுண்டலீ, சிவயோகதீபிகை, ராஜயோகபாஷ்யம், யோகரஹஸ்யசம்பிரதாயம் முதலிய பலநூல்கள்யோகத்திற்காகப் பிரவிர்த்தித்திருக்கின்றன. வெகுவாய் தந்திரங்களனைவற்றிலும் நாலிலொருபாகம் யோகம் நிரூபிக்கப்படுவது சர்வப்பிரசித்தம். ஆகவேயோகம் மோட்சத்தையளிக்கும் ஞானத்திற்குச்சாதனமென்றேற்பட்டது. இந்தயோகம் முன் யுகங்களில் மிகப்பிரயாஸப்பட்டால் சாதிக்கக் கூடியதாயிருக் கலாம். இக்கலியில் கலியின் மகத்துவத்தாலும், தற்காலத்தவர்கட்கு ஆயுள்மிகக்குறைவாதலாலும் அதற்குரித்தானசாதனங்கள் கிடைக்காமையாலும் அந்த யோகானுஷ்டானம் இக்கலியில் சாதிக்க முடியாதென சங்கைப்படுவோரினு சங்கையை நிவர்த்திக்க இந்தயுகத்திலும் யோகசித்திபெற்ற பெரியோர்களின் திருநாமங்களை நிரூபிப்பாம்.— "ஆதிநாதன், மத்ஸயேந்திரன், சபரன், ஆனந்தபைரவன், சௌரங்கீ, மீனர், கோரக்ஷர், விருபாக்ஷர், பிலேசயர், மந்தானர், பைரவர், சித்திபுத்தர், கந்தடி, கோரண்டகர், சுராநந்தர், சித்தபாதர், சர்ப்படி, கானேரீ, பூஜ்யபாதர், நித்தியநாதர், நிரஞ்சனர், கபாலீ, பிந்துநாதர், காகர், சண்டசுவரர், அல்லமப்பிரபு, கோடா, சோளீ, டிண்டிணி, பானுகி, நாரதேவர், கண்டர், காபாலிகர்" இது முதலாயினோரனேகர் ஹடயோகப்பிரபாவத்தால் காலதண்டத்தைக் கண்டித்து ப்ரம்மாண்டத்தின் கண் சஞ்சரிக்கின்றார்கள். பற்பல தாபங்களால் தபிக்கப்பட்டவர்களுக்கு ஹடயோகம் தாபம் நீக்கத் தங்குமிடமாம். அனேக யோகம் பெற்றோர்க்கு முக்கிய ஆதாரமாயுமுள்ளது. மற்று மிந்த யோகத்தில் பிரசித்திபெற்ற ஜாலந்தரநாதர், ஸ்வாத்மாராமயோகி, கோபிசந்திரர் முதலியவனேகருண்டு. இப்புண்ணியபுருஷர்களது திவ்யதிருநாமங்களைச் செவியுற்றும் 'அவர்கள் காலஞ்சென்று விட்டதே, தற்காலத்தில் எவ்விதம் அச்சம்பிரதாயம் கிடைக்கும்' என மீண்டுமோசங்கையுள்ளார் பின்வரும் மகான்களைக்கண்டு தெளிவாராக. இப்பொழுதும்ஹம்பாத்தில் மாணிக்கியப்பிரபு,காசியில்பௌனிஸ்வாமி,பாஞ்சாலதேசத்தில்குருகோவிந்தர், மஹாராஷ்டிரதேசத்தில்அங்கதேவர்,தெலுங்குதேசத்தில் உச்சையசாபரிபரமஹம்ஸர் முதலிய மகாயோகிகள் சித்திபெற்றிருக்கிறார்கள். அவர்களது சரித்திரத்தைச் சாக்ஷியாய்க் கண்டவனேகருண்டு. இதைக்

[illegible]

[illegible]

[illegible]

கண்டும் பிரத்தியக்ஷமே பிரமாணமென நினைப்போருக்கு இப்பொழுது தரிசிக்கக்கூடிய மகான்களை அறிந்தவரை நிரூபிப்பாம். நைமிசாரண்ணியத்தில் ஸ்ரீ விசுவநாதயோகியும், குருக்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஸஹஜானந்த ஸ்வாமிகளும், வைத்தியநாத க்ஷேத்திரத்திற்கு சமீபத்தில் பாலானந்த பிரம்மசாரிகளும், ஹரித்துவாரத்தில் பசுபதிதேவரும், விலாஸபுரத்திற்குச் சமீபத்தில் புக்கிரிதேவரும், புரோசி கிராமத்திற்கு நெடுந்தூரமல்லாத தேசத்தில் கமலபாரதியும், மற்றுமனேக யோகசித்தரிருக்கின்றார்கள். ஹநுமத்பர்வதத்திலும் தென்னாட்டில் மலயகிரியிலும், அகஸ்தியகூடத்திலும் அநேக சித்தரிருப்பதாகத் தெரியவருகிறது. இங்ஙனம் மிக பிரயாஸைப்பட்டுயோகத்தை அப்பியசிக்காமல் சாத்திரத்தைமாத்திரம்சற்றுச்சிலர்சந்தோஷமடைகின்றனர்- அவர்களை யுத்தேசித்துத்தான் ஹடயோகப்பிரதீபிகையில்,— "கிரியையுடையோனுக்குச் சித்தியுண்டு இல்லாதவனுக் கெங்ஙனமுண்டு. சாத்திரம் படித்ததால் மட்டும் யோகசித்திக்கிடைக்காது. வேஷம் போட்டுக்கொள்ளுவதும் கதைபேசுவதும் சித்திக்குக் காரணமாகாது. அனுஷ்டிப்பதே சித்திக்குக் காரணமென்பது திண்ணம்" என்று கூறப்பட்டுள்ளது. வைத்திய சாத்திரத்தைக் கற்றதால் மட்டும் யாதும்பயனில்லை. ஆயின் அதிற்[illegible]த்த வாறு செய்பக்கைப் ப[illegible]முமிருந்தாற்றான் பயன் படும். அதுபோலவே யாம் யோகசாத்திரமுமென்று இச்சுலோகத்தின்கருத்தாம். மனுவும்—'தாயுடனாவது தங்கையுடனாவது பெண்ணுடனாவது ஏகாந்தத்தில் வீற்றிருக்கக்கூடாது. மிகப்பலமுள்ள புலன்கள் கற்றுணர்ந்த பண்டிதனையுமிழுத்துவிடும்' எனக் கூறினமையால் மனதை ஜெயிக்காமல் கேவலச் சாத்திரத்தாலெவனும் சித்திபெறுனென்றேற்படுகின்றது. ஆகையால் தனக்கு இன்பமுண்டாக விரும்பும் மனிதன் இந்த யோகத்தை அவசியம் அப்பியசித்தல்வேண்டும். இவ்வளவு யாம் உபன்னியசித்ததைக்கேட்டும் சிலர் வீண்வாதம் புரிவாராயின் "யாம் கிழவனாய்விட்டோம். இனிச் செய்வதென்னை? யௌவனமோ சென்றுவிட்டது. சரீரத்தில் சற்றேனும் பலமில்லை. இங்ஙனமுற்சாஹமற்றவர்க்கு யோகமென்ற பேச்செடுக்க வழியுண்டோ" என்று வினாய்ச்சென்ற இளம்பருவத்தை நினைத்து வருந்துமவரைக்

[illegible]

𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿।

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃

[illegible]

[illegible]

[illegible]

குறித்து ஹடயோகப்பிரதீபிகையில் - 'யௌவனமுடையவனாயினும் கிழத்தன்மையுடையவனாயினும் ரோயாளியாயினும் பலஹீனனாயினும் யோகங்களில் சோம்பலின்றி அப்பியாசம்செய்வானாயின்சித்திபெறுவான்' என்க்கூறப்பட்டது. ஆகையால் யோகத்திற்குமுக்கிய சாதனம் அப்பியாச மென்றேற்படுகிறதென்.

வரும்.

கடிதம்.

கடிதக்காரர்களினபிப்பிராயம்பத்திராதிபரைச்சாராது

மனிதனும் மற்ற சராசரங்களும்.

இவ்வுலகம் படைத்த நாண்முதல் நம்மோடு கூடி வாழ்ந்துகொண்டிருக்கும் சராசரங்களிடத்தில் இயற்கையாயமைந்த குணங்களை நாம் யோஜித்துப்பார்த்து அவைகளில் தள்ளவேண்டுவதைத் தள்ளி நாம் நடத்தவேணடியதைக் கொள்ளவே ஈசுவரன் அதை நம்முடன் வைத்திருக்கின்றான் என்று நினைத்து ஒவ்வொருவரும் அதைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினால், நமக்கு நீதிவழியைப்புகட்ட தர்மசாஸ்திரங்கள் வேண்டாம். தெரியாத காரியங்களை அறிவிக்க மந்திரி போன்ற சிநேகிதன்வேண்டாம். நல்லவழியில் நிற்கச்செய்ய குருக்கள் வேண்டாம். ராஜ்ஜியத்தைக் காப்பாற்ற வேறு அரசன் வேண்டாம். உபன்னியாசங்களைச் செய்ய உபன்னியாசகர்கள் வேண்டாம். மற்றும் அநேக விஷயங்களுக்காக நாம் அபேக்ஷிக்கும் புத்திமதிகளுக்கு ஒருவனையும் தேடவேண்டாம். அங்ஙனம் யோஜிக்கத்திறமை யற்றதினாற்றான் அநேக சாதனங்கள் வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவனுக்கும் இகசாதனம் பரசாதனம்என இரண்டு சாதனங்கள் வேண்டியிருக்கிறது, இரண்டிற்கும் பொதுவாகவும்வேண்டும். ஆனதினால் அச்சாதனங்கள் இயற்கையாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஆய்ந்தறிந்து அனுபவிக்கச் சாமர்த்தியமற்று நாம் தியங்குகிறோம். உதாரணமாக, ஆங்கிலேய நாட்டார், இயற்கையான பஞ்சபூதங்களையும் அதனம்சங்களையும் கொண்டு எவ்வளவோ அபூர்வமாக இயற்றி நமக்கு வெகுஅதிசயமாக அனுப்புகிறார்கள். அவைகளை யெல்லாம் அவர்கள் ஆதியில் ஒருவர் சொல்லிக் கொடுத்தறிந்ததல்ல. தங்கள் சொந்தக்கூர்மையுள்ள புத்தியினால் பலநாட்சிந்தித்துபண்படுத்திய வஸ்துக்கள். அவ்வஸ்துக்கள் நமக்குஇப்பொழுதுஎவ்வளவோ சாதகத்தைத் தருகிறது.

[illegible]

அவைகளைக் கண்டு நாம் அவர்கள்மேல் ஈர்ஷைப்படுவது அறிவீனம் அவர்களிடத்துள்ள சாதகமானதை பயில்வதற்கு முயற்சிசெய்யவேண்டுவதே புத்திசாலிகள் தொழில் அவர்களுடைய பெருமுயற்சியைப்பற்றிச்சிந்தித்து நாமும் அம்மாதிரி நடக்கமுயல்வதேநலம். இது நிற்க.

நாம் ஒரு கண்காட்சிசாலைக்குப் போய் அங்குள்ளச் சராசரங்களை கண்ணால் பார்த்தால் நம்முடைய மனதிற்கு பரமசுகத்தைக் கொடுத்து, துக்கத்தை யெல்லாம் நொடிப்பொழுதில் தொலைத்து விடுகிறது. பார்த்ததினாலேயே அவ்வளவு உண்டாகுமானால், அவைகளின் ஒவ்வொரு குணங்களையும், சிந்தத்திது மேற்சொல்லியபடி செய்தால், எவ்வளவுநன்மையைப்பயக்காது. முன்னொருக்கால் நான் திருவனந்த [புரத்துக்குப் போயிருக்குங்கால், அங்குள்ள கண் காட்சிசாலைக்குச் சென்று இருந்தேன். அதில் சிந்தித்ததை அடியில் வருமாறு தெரிவிக்கிறேன். அதில் குற்றமுள்ளதைத்தள்ளி குணத்தைப் பாராட்ட வேண்டும். ஓர் நள்ளிரவில் அநேக துர்சுவப்பனங்களால் பிடிக்கப் பட்டு, மூளையும் கலங்கி, மனதும் சஞ்சலப்பட்டு, பித்தம் பிடித்தவன் போல, சிறிதும் உறக்கம் வராமல், சரீரத்தைப்பற்றிய துக்கம் மேலிட்டு, ஈசுவரனைப்பிரார்த்தித்து, வெளியில் வந்து தெருவீதியோடுவருங்கால் நிர்சப்தமாய் இருந்தது. இப்படித்தானன்றோ, ஜகத்தின் ஆரம்பகாலத்தில் அதாவது பிரகிருதியில் ஜீவன் அடங்கி இருக்கும்போது, எல்லோரும் பரம அக்ஞான சுழுப்தியில் அதிஷ்டித்து அந்தகாரம் மேலிட்டு குணமயமாய் இருந்திருக்கும். இத்தகைய அந்தகார அக்ஞான சுழுப்தியிலேயே, ஜீவன் அடங்கி இருக்கும். இவ்வளவு ஆநந்தமாயிருக்க :அக்ஞானமும் ஒழிந்து தன்னிலைமையில் சுத்தமாய், சின்மயமாய், சிதாகாய சின்மய பேரானந்தமாய் இருந்தால் அதற்குற்ற சுகம் வேறொன்று உண்டோ. அதுவன்றோ இச்சீவன் பெறவேண்டிய பெருநிலைமை. அந்நிலைமையயன்றோ கருணைமிகுந்த கரைமிடற்றண்ணல் கையிலையங்கிரியில் தென்முகமிருந்து (அதாவது) (ஆரிய வர்த்தத்தின் அருமந்த முமுக்ஷுக்களின் அல்லல்தொலைய தென்முகம் நோக்கியதாம்) சின் முத்திரைகாட்டிசிற்றம்பலத்தொண்டராகிய சனகாதி யோகிகளுக்கு அருளியது. அதையேயன்றோ? நமதுஆசாரியராகிய சங்கரானந்தச் செல்வர், "சித்ரம் வடதரோர்மூலே வ்ருத்தாஃஶிஷ்யா குருர்யுவா | குரோஸ்து மௌன

[illegible]

நந்த்ரஹ்மானந்தரஸானுபூதிகலிதை: ... ஸம்ஸாரா:" [illegible] என்று ஸ்தோத்திரத்தது. அத்தகைய யோகிகளின் பாதஸ்பரிசம்பட்டதாலன்றோ. இத்தேசத்துக்கு இத்தகைய வைதிகம் வலுத்த வள்ளுவநாடெண ஆன்றோரென வழங்கலாயிற்று. அந்தோ! அத்தகைய மோக்ஷத்தைப் பெறவன்றோ நாம் முயற்சிக்கவேண்டும். முயற்சியில்லையே. என்செய்வேன். அருளமைந்த ஆசிரியனைத்தேடி ஊர் ஊராயலைந்தும் பெறுதொழிந்தோமே. இனி என்செய்வது. எவர்பாதத்தைத் துணையாய் பற்றுவது. யார் நம் அக்ஞானத்தை நீக்கவல்லார். ஓ கருணையங்கடலே! புரத்திரயங்கடந்த புண்ணியனே! அருள்வலிமிகுந்த அண்ணலே எனமீது கருணை செய்யலாகாதா! எனது தீவினையை ஒழிக்கலாகாதா. இம்மாயை பொழிவதெக்காலம், அருட் பெருங்கடலை அடைவது எக்காலம்! யாரிடத்திற்சென்றாலும் உலகயறிவையின்றி உண்மையறிவைப்புகட்ட உண்மையில்லையே. அதற்கு நான்பாத்திரனில்லையோ! அவ்வியாஜகருணையுடையார் மந்தனுக்கும் மகிமை யுண்டாக்குவரே! என்று சிந்தித்துக்கொண்டு சிறிது தூரம் செல்ல, வானத்தினின்று சிறிது மழைத்துளிகள் ஒவ்வொன்றாய் எனது தாபாக்கினியை அணைக்கவந்த அமுதம்போல் கீழே விழுந்தது! இப்படியன்றோ மேகத்துக்கள் முமுக்ஷுக்களுக்கு குளிர்ந்த அமிருத மொழிபோல் பவாக்கினியைத் துலைக்க குளுமையாய் இனியவாக்கால் மேகம்போல் ஒரு பிரதிபலனையும் அபேக்ஷியாது ஞானதத்துவத்தை வாக்கு என்னும் மழைத்துளிகளால் பவாக்னியால் எரிக்கப்படும் சீடன்பால் மொழிவார்கள். இதையல்லாம் எமது பரமாசாரியன் சூடாமணியில். "[illegible]" என்று சீடனுக்கு பிரார்த்திக்கக் காட்டிக்கொடுத்தார். அவர்கள் அருளோடு எல்லாமறிவித்திருக்கக்கண்டறியத் தெரியாது விளக்கிக்காட்ட குரு வில்லாது அலைகி[illegible] நமக்குத் தாபம் மிகுந்தால் மஹான்கள் [illegible] யக்கார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! நம் [illegible] பம் நீடித்திருக்க வில்லையே. இம்மேகமு[illegible] உஷ்ணத்தாலும், சூரியன்உஷ்ணத்தாலும்[illegible] டுத்துளிகளாகக் கீழே விழுகிறது. அது [illegible]

[illegible]

டத்திலும் சம்சாரதாப உஷ்ணம் பெருத்திருக்குமானால குருநாதனாகிய மேகமும், உருகி நம்மிடத்தில் வந்து பெருங்கருணையால் கடாக்ஷிப்பார் என்று சிந்தித்துக்கொண்டு வெகுதூரம் செல்ல சேவல் தனது இனியகுரலால் கூவிற்று. அக்குரலைக் கேட்டு நமமோடு இதுவும் ஞானசூரியனான குருவை யழைக்கிறது. இதனிடத்தில் நம்மைப்பார்க்கிலும் நல்ல குணங்கள் அநேகம் இருக்கிறது. அது இரைதேடினால் குப்பையெலாம் கிளறி அசுத்தத்தைத்தள்ளி சத்தானபதார்த்தை எடுத்துக் கொள்கிறது. நாமோ யாராவது புத்திசொன்னால் அவரிடத்தில் கோபித்து அவரை அவருடைய கெட்டகுணங்களை எல்லாம் சொல்லித் தூஷிக்கத்துடங்குகிறோம். குக்குடம் போல் அவர்கள் சொன்னதில் நல்லதை கிரஹிக்கவில்லை. இன்னும் அதுபல ஜனங்களுக்கு உபகாரமாய் விடியற்காலத்தில் எழுந்து தெருவீதியோடு கூவி, எல்லோரையும் "தூக்கத்தை விட்டு எழுந்திருங்கள் சூரியபகவான் வந்து விட்டார். தெரிசியுங்கள், ஈசுவரனை பஜியுங்கள்" என்று எல்லோருக்கும் உபன்னியாசம் செய்கிறது. நாமோ அநேகரை வசைச்சொற்களால் வாயில் வந்தபடி சொல்லுகிறோம். இதனிடத்தில் நம்மைப் பார்க்கிலும் நல்ல குணங்கள் இருக்கிறது. இக்குணத்தை கடைப்பிடிப்பதால், நமக்கு அநேக நன்மையுண்டு. என்று பலவாறு சிந்தித்து கொஞ்சம் நடக்க ஆதித்தனும் ஜனங்களை எழுப்பும் தூதன்போலும், ஞானபிரகாசத்தைக் கொடுக்கும் குருவைப்போலும், கிரணங்களுடன் தோன்றினான். கடலின் ஓசையும் காதில் வெகு முழக்கத்துடன் கேட்டது. அதனண்டைபோய் நின்று வெகுதூரஞ் சிந்திக்கலானேன். இக்கடலின் அலைபோலல்லவா நமது மனமெனும் சமுத்திரத்தில பல்லாயிரம் சங்கற்பமெனும் அலைகள் வந்துகொண்டிருக்கிறது. அவ்வலைகளை கரையில் வந்து தாக்குவதுபோல் நாமும் காரியங்களைச் செய்ய முயற்சிக்கிறோம். மறுபடியும் ஒரு சங்கற்பத்தால் மற்றொருகாரியத்தைச்செய்ய முயற்சிக்கிறோம். இவ்வலை ஓயும் போது தான் மனத்தின சங்கற்பமும்தலையுமோ, அதில்ஓடும்தோணிகள்போல அநேக உருவெளிகள் மனச்சமுத்திரத்திரல் ஓடுகிறது. அதின் கரையை காணாதது போல், மனத்தின் எல்லையைக் காணமுடியவில்லை. அநேக கிட்டுக்கள்

[illegible]

[illegible]

விவேக சூடாமணி:

[illegible] ௧௮௧

[illegible]

[illegible] ௧௮௨

[illegible] ௧௮௩

[illegible] ௧௮௪

சிறிதாக இருக்கிறதுபோல் புத்தியும் அநேகவிஷயங்களை நிச்சியிக்கிறது. அதில் அநேகஜாதி துஷ்ட ஜந்துக்களும், பவழங்களும் முத்துக்களும் கிடைக்கிறதுபோல், நமது மனதில் காமக்குரோதாதி கெட்டகுணங்களும் பக்தி சிரத்தை யாதி நற்குணங்களும் இருக்கிறது. அது காற்றுவீசி அலைகளைக் கிளப்புவது போல் மனத்திலும் ஆசையாகிற காற்று வீசி சங்கற்பம் என்னும் அலைகளை உண்டாக்குகின்றது. அதில் சூரியசந்திர பிரதிபிம்பம் தெரிவதுபோல ஆத்மாவும் அதில் ஜீவனுப் பிரதிபிம்பித் திருக்கிறான். அதில் அநேகர் விழுந்து இறக்கிறதுபோல் அநேகர் மனவழி சென்று மாள்கிறார்கள், அது அநேகருக்குபாத்திரை செய்ய சௌக்கியமாய் இருப்பதுபோல் மனோவழியாகவே முக்தியாத்திரை செய்யவேண்டியிருக்கிறது.

வரும்,

ஓம்॥

ஓர் சந்நியாஸி.

விவேக சூடாமணி.

தொடர்ச்சி

அஸங்கனும், சித்சொரூபனுமான ஆன்மாவைமயக்கி, தேகேந்திரியாதிகளின் குணங்களால் கட்டி பயனையுடைய தன்காரியங்களில் நானென்று மென்னுடையதென்றும் பிராந்தியை யுண்டாக்குகின்றது மனம். (181)

புருடனுக்கு அத்தியாஸதோஷத்தால் ஸம்ஸாரமுண்டாகின்றது. அவ்வத்தியாஸமு மிவனுற்றான் கற்பிக்கப்பட்டது. ரஜஸ்,தமஸ்இக்குணங்களின தோஷத்தால் கட்டுண்டு விவேகமிழக்க புருடனுக்கு பிறப்பு முதலிய துன்பங்கட்க் கேதுவாமிம்மனம். (182)

ஆகையால் உண்மைபாராச்சியுடைய பண்டிதமணிகள் அம்மனதையே அவித்தையென்கிறார்கள். அதனுற்றான் ஜகமனைத்தும் காற்றிலகப்பட்டமேகம்போற் சுழலுகின்றது. (183)

ஆதல்பற்றி வீடுபெறவிருப்புவோன் முயற்சியுடன் மனதைச் சுத்திசெய்யவே[illegible]யது. இது சுத்த[illegible]ன் மோக்ஷமகங்கைக்கனிபோ[illegible]

மோக்ஷத்தின் கண்ணே போவாக்கொண்டு[illegible] யங்களிலாசையை அடியோடறுத்து, சகல [illegible]

[illegible] க௮௬

[illegible] க௮௭

[illegible] க௮௮

[illegible] க௯௦

[illegible] க௯க

[illegible] க௯௨

[illegible] க௯௩

ஶிஷ்ய உவாச.

[illegible] க௯௪

ளேயும் விட்டொழித்து, மிகச்சிரத்தையுடன் சிரவணம் மனனம் முதலியவற்றில் நிட்டைபெற்றவன் புத்தியினது ரஜோகுணத்தை முற்றுங் களைப்பான். (185)

இத்தகைய மனோமயமானது ஆத்யந்த முடைத்தாகையாலும், பரிணாமமுடையதாகையாலும், கேவலம் துக்கமயமாதலாலும், விஷயங்களி லொன்றாகையாலும், திருச்யனல்லாதவனும், திரஷ்டாவாயுள்ளவனுமான ஆன்மாவாகாது. (186)

ஞானேந்திரியங்களைத்தடன் கூடின புத்தியானது விருத்தியுடையதும், கர்த்தாவாயுள்ளதும், புருடனுக்கு ஸம்சாரகாரணமுமான விஞ்ஞானமயகோசமாம். (

இவ்விஞ்ஞானமயகோசம், சித்தின்பிரதிபிம்பத்தையனுஸரிப்பது. பிரகிருதியின் விகாரமாயுள்ளது. ஞானத்தின் கிரியையுடையது. தேகேந்திரியாதிகளில் யானென்ற பூர்ணாபிமானமுடையது. (188)

அனாதிகாலமாயுள்ளவனும், சகலவியவகாரங்களை வஹிப்பவனும், அகங்கார முடையவனுமான ஜீவன் பூர்வவாஸனைகளுடன், புண்ணியபாவரூபமான கன்மங்களை யியற்றுகிறான். அதன்பயனையனுபவிக்கிறான், பல்வகை விசித்திரயோனிகளிற் பிறப்பதும், மேலும் கீழுமாய்ச் சுழண்டு கொண்டும்வருகிறான். அந்தவிஞ்ஞானமயகோசத்திற்கு, ஜாகரம், ஸ்வப்னம் முதலியன அவஸ்தைகளாம். இன்பதுன்பங்களை யனுபவிப்பதுமாமது. (189) (190)

தேகேந்திரியாதிகளுக்கியற்கையான வர்ணாசிரம முதலியவைகளைத் தனக்கென்றபிமானம் வைத்து, இவ்விஞ்ஞானமய கோசமானது பரமாத்மாவினது சமீபசான்னித்தியம் பெற்றமையால் மிகப்பிரகாசமாய் விளங்குகின்றது. ஆகையாலிது உபாதியாம். இதனாற்றான் ஆன்மவறிவுடையோனும் பிராந்தியால் சம்சாரியாகிறான். (191)

இந்த விஞ்ஞானமயகோசத்தால் ஹிருதயத்தில் சுவயம் பிரகாசனாயுள்ளவனும் கூடஸ்தனுமான வான்மா, உபாதிபெற்றவனும் கர்த்தாவாயும் போக்தாவாயுமாகிறான். (192)

ஆன்மா புத்தியினது ஓர் பாகத்தையடைந்து தன்மயமாய் அந்ததோஷத்தால் 'தான் ஸர்வசொரூபியாயினும்' மற்றதனைத்தையும் மண்ணைவிட மண்குடம் வேறென்றெண்ணுவதுபோல் தன்னைவிட வேறென்று நினைக்கின்றான். (193)

உருவமற்றதாயினுமக்கினி இருப்புடன் சேருங்கால் அதன் விகாரமாய் ரூபம் பெறுவதுபோல ஆன்மா ஏகரூபனாயினும் உபாதி சம்பந்தத்தால் அதற்குரித்தான தர்மங்களை யனுஸரிக்கின்றான். (194)

சிடன்÷ பரமாத்மாவுக்கு ஜீவத்தன்மையானது பிராந்தியாலோ, மற்றெவ்விதத்தாலோ உண்டாகட்

அதோऽஸ்ய ஜீவபாவோऽபி நித்யோ பவதி ஸம்ஸ்ருதி: | ந நிவர்தேத தன்மோக்ஷ: கதம் மே ஸ்ரீகுரோ வத ||

ஸ்ரீ குருருவாச.

ஸம்யக் ப்ருஷ்டம் த்வயா வித்வன் ஸாவதானேன தச்ச்ருணு | ப்ராமாணிகீ ந பவதி ப்ராந்த்யா மோஹிதகல்பனா || ௧௯௭||

ப்ராந்திம் வினா த்வஸங்கஸ்ய நிஷ்க்ரியஸ்ய நிராக்ருதே: | ந கடேதார்த்தஸம்பந்தோ நபஸோ நீலதாதிவத் ||

ஸ்வஸ்ய த்ரஷ்டுர்நிர்குணஸ்யாக்ரியஸ்ய ப்ரத்யக்போதானந்தரூபஸ்ய புத்தே: | ப்ராந்த்யா ப்ராப்தோ ஜீவபாவோ ந ஸத்யோ மோஹாபாயே நாஸ்த்யவஸ்துஸ்வபாவாத் || ௧௯௯||

யாவத்ப்ராந்திஸ்தாவதேவாஸ்ய ஸத்தா மித்யாஜ்ஞானோஜ்ஜ்ரும்பிதஸ்ய ப்ரமாதாத் | ரஜ்ஜ்வாம் ஸர்ப்போ ப்ராந்திகாலீன ஏவ ப்ராந்தேர்நாஶே நைவ ஸர்ப்போऽபி தத்வத் || ௨௦௦||

அநாதித்வமவித்யாயா: கார்யஸ்யாபி ததேஷ்யதே | உத்பந்நாயாம் து வித்யாயாமாவித்யகமநாத்யபி ||

ப்ரபோதே ஸ்வப்னவத்ஸர்வம் ஸஹமூலம் வினஶ்யதி | அநாத்யபீதம் நோ நித்யம் ப்ராகபாவ இவ ஸ்புடம் || ௨௦௨||

அநாதேரபி வித்வம்ஸ: ப்ராகபாவஸ்ய வீக்ஷித: | யத்புத்த்யுபாதிஸம்பந்தாத் பரிகல்பிதமாத்மனி || ௨௦௩||

ஜீவத்வம் ந ததோऽந்யஸ்து ஸ்வரூபேண விலக்ஷண: | ஸம்பந்த: ஸ்வாத்மனோ புத்த்யா மித்யாஜ்ஞானபுரஸ்ஸர: || ௨௦௪||

விநிவ்ருத்திர்பவேத்தஸ்ய ஸம்யக்ஜ்ஞானேன நான்யதா | ப்ரஹ்மாத்மைகத்வவிஜ்ஞானம் ஸம்யக்ஜ்ஞானம் ஶ்ருதேர்மதம் || ௨௦௫||

ததாத்மாநாத்மனோ: ஸம்யக்விவேகேநைவ ஸித்யதி | ததோ விவேக: கர்த்தவ்ய: ப்ரத்யகாத்மஸதாத்மனோ: ||

கிடும். அந்த வுபாதியோ அனாதியாயிருக்கின்றது. அனாயுள்ளதிற்கோ நாசமில்லை. ஆகவே இவனுக்கு ஜீவத்தன்மையும் நித்தியமாகவே ஆகின்றது. அங்ஙனமிருக்க இவனுக்கு ஸம்ஸாரமெங்ஙனநீங்கும். மோக்ஷமுண்டாவதெவ்விதம். குருநாத! இதனைச் சொல்லவேண்டும். (195) (196)

குருநாதன் — கற்றவனே நன்கு கேட்டாய். மிக்க ஜாக்கிரதையாய்க் கேழ்ப்பாயாக. பிராந்தியாற்றோன்றின கற்பனையானது என்றும் பிரமாணமாகாது. (197)

அஸங்கனும், கன்மசூன்யனும், உருவமற்றவனுமான ஆன்மாவுக்கு பிராந்தியைத்தவிர வேறெவ்விதத்தும் (சுத்த ஆகாயத்திற்குக்கரிய நிறம்போல்) வஸ்து சம்பந்தம் சம்பவிக்கவே மாட்டாது. (198)

தன்னைத்தான் காண்போனும், குணங்களற்றவனும், கன்மசூன்யனும், பிரத்தியகானந்த சொரூபியுமான ஆன்மாவுக்கு புத்தியிலுதித்த பிராந்தியால் ஜீவத்தன்மை சேர்ந்ததேயன்றி உண்மையில் சேர்ந்ததல்ல. அம்மோகம் நீங்கினபின் வேறுயாதுமில்லை. (199)

மித்தியா ஞானத்தால் (அக்ஞானத்தால்) விருத்தியடைந்த இச்சீவத்தன்மை பிராந்தியுள்ளவரை கயிற்றின்மீது அரவமென்றவறிவு மதிமயக்க முள்ளவரை நிற்பதுபோல் நிற்குமாம். அம்மயக்கம் நீங்கினக்கால் அரவந்தோனாது போலிதுவுந்தோன்றாதாம். (200)

வித்தை (ஞானம்) யுண்டாகும்வரைதான் அவித்தையின் காரியம் நிற்கும். ஞானமுதித்து விட்டால் அவித்தையாலுண்டானது அனாதியாயினும் ஜாகரத்தில் ஸ்வப்னம்போல் அடியோடு நசித்துவிடும். (201)

இது அனாதியாயினும் பிராகபாவம் (முன்னில்லாமை) போல் நித்தியமன்று. பிராகபாவமனாதியாயினும் அதன் நாசம் காணப்பட்டிருக்கின்றது. (202)

புத்தியென்னுமுபாதி சம்பந்தத்தால் ஆன்மாவினிடத்து ஜீவத்தன்மை கற்பிக்கப்பட்டதேயன்றி உண்மையில ஆன்மாவைவிட வேறாயுள்ளதொன்று மில்லை. ஆன்மாவுக்கு புத்தியுடன் ஸம்பந்தமுண்டானது மித்தியாஞானத்தாலாம். அது நல்லறிவால் (உண்மை புணர்ச்சியால்) நீங்குமேயல்லாது மற்றெவ்விதத்தும் முடியாது. (204)

நல்லறிவென்பது 'ப்ரம்மமே ஆன்மா' என்ற அறிவென்று சுருதியின் கூற்று. அது ஆத்துமானாத்தும விவேகத்தாற்றான் பெறத்தகுமாம். (205)

[illegible] ௨௦அ॥

[illegible] ௨௦கூ॥

[illegible] ௨௧௦॥

[illegible] ௨௧௧॥

[illegible] ௨௧௨॥

[illegible] ௨௧௪॥

சிஷ்ய உவாச.

[illegible]

ஸ்ரீகுருருவாச.

[illegible] ௨௧௭॥

[illegible]

ஆகையால் ஆத்துமாநாத்தும விவேகம் செய்பவேண்டியதவசியமாம். நீரானது சேருடனிருந்தால் நன்கு புலப்படாது. சேரில்லாவிடில் நன்கு புலப்படும். அத்தன்மைபோல் ஆன்மாவும் தோஷமில்லாவிடில் சுவயம் பிரகாசனாய் புலப்படுவான். (206)

அஸத்தை யொழித்தால் பிரத்தியகாத்துமா சத்சொரூபனாய் புலப்படுவோன். ஆகையால் அகங்காரம் முதலியவைகளை தன்னிடமிருந்து தள்ளவேண்டுவதவசியம். (207)

ஆகவே உபாதியான இவ்விக்ஞானமயகோசம் பரமான்மாவாகாது. விகாரமுடையதாதலாலும், ஜடமாதலாலும், பரிச்சின்னமாகையாலும், திருச்யமாதலாலும் அநித்தியமாதலாலுமாமென்க. (208) (209)

ஆனந்தப் பிரதிபிம்பத்திற்றோன்றும் தமோகுணவியாப்தமான விருத்தியே ஆனந்தமயகோசமாம்; பிரியம் முதலிய குணங்களையுடையது. தனதிஷ்டம்நிறைவேறினவுடனுதிக்கும் தன்மையுடையது. புண்ணியயசிலர் அப்பயனையனுபவிக்குங்கால் ஆனந்தரூபமாய் விளங்குவதுமாம. (210)

இவ்வானந்த மயகோசம் சுழுத்தியில் நன்கு விளங்கும். ஸ்வப்னத்திலும், ஜாகரத்திலும் இஷ்டவஸ்துவைக்காணல் முதலியவற்றால் கொஞ்சம் விளங்குவதுபோல் காணப்படும். (211)

இவ்வானந்த மயகோசமும் உபாதியுடைத்தாகையாலும் பிரகிருதியின் விகாரமாகையாலும், காரியமாகையாலும், ஆன்மாவாகாது. (212)

இங்ஙனம் குறிக்கப்பட்ட அன்னமயாதி ஐந்துகோசங்களையும் யுக்தியால் நிஷேதிக்குங்கால் சகல சாக்ஷியும் ஞானசொரூபனுமான ஆன்மா எஞ்சுவான். ()

இவ்வான்மா சுயஞ்சோதியும், ஐந்துகோசங்களுக்கு விலக்ஷணனும், மூன்று அவஸ்தைகளுக்கு ஸாக்ஷியும், நிர்விகாரனும், நிரஞ்சனனும், ஸதானந்தனுமாயுள்ளவன். இவனையே பண்டிதன் தானென்றறிய வேண்டியது. (214)

சீடன்— இங்ஙனம் அன்னமயாதி ஐந்துகோசங்களையும்மித்தையென நிஷேதித்தொதுக்குவோமாயின் வேறொன்றுங்காணப்படவில்லை. அப்பொழுது அறியவேண்டியவஸ்துயாதுளது? ஆன்மஞானிஎதனை யறிவான்.

குரு— அறிந்தேனே! நன்குரைத்தனை விசாரணை செய்வதில் நீமிகநிபுணன். அகங்காரம் முதலிய விகாரங்களும், அதனபாவமும் இவையெல்லாமெவனால் அனுபவிக்கப்படுகின்றனவோ? எவனொன்றாலுமனுபவிக்கப்படுபவனில்லையோ அவனையேஸர்வக்ஞனான ஆன்மாவெனசூக்குமபுத்தியால் அறிந்துகொள்வாயாக. (216) (217)

இன்னும்வரும்.

[illegible]

[illegible]

[illegible] ॥௪௰॥

[illegible] ॥ ௪௧ ॥

[illegible] ॥ ௪௨ ॥

[illegible] ॥௪௩॥

[illegible] ॥௪௪॥

[illegible] ॥௪௫॥

[illegible] ॥௪௬॥

[illegible] ॥௪௭॥

[illegible] ॥ ௪௮ ॥

[illegible] ॥ ௪௯ ॥

[illegible] ॥ ௫௰ ॥

[illegible] ॥௫௧॥

[illegible] ॥௫௨॥

[illegible]

[illegible]

தத்துவாராய்ச்சி.

இவ்வுலகத்துற்ற, ஜந்துக்களனைத்தும் தத்தம் தொழிலைப்பற்றிச் செய்து தன் வயிற்றில் ஏதேனும் ஒருபதார்த்தத்தை சேர்த்து, அது ஜீர்ணமானவுடன் வெளிப்படுத்தி மறுபடியும் தின்பதே தொழிலாயும், மற்றும் அவையவைகள் தன்னினங்களுடன் கூடியுறவாடுவதும், ஒன்றையொன்று கட்டுபாராட்டி, ஆநந்தப்படுவதும், அவைகளில் ஒன்றுக்கு ஏதேனும் கெடுதிநேர்ந்தால் துக்கப்படுவதும், ஸ்திரீலிங்க புல்லிங்க சம்சர்க்கத்தில் ஆநந்திப்பதும், அவ்வாநந்தத்தில் இடையறாது இருந்தாலும், தேகத்திமிறு பூர்ணமாயுள்ளவரையில் விடாது ஒவ்வொரு நாளும், அவ்வாநந்தத்தில் இச்சைகொள்வதும், அதினால் உண்டாகும் பிரஜாவிருத்தியினால் ஆநந்தித்து, தனது புத்திரன் என்று அபிமானிப்பதும் அதை மிகக்கருணையோடு பார்துகார்ப்பதும், தனது எண்ணத்திற்கு விரோதமாகவேறொன்றால் இயற்றப்பட்டால் அதன்மீது சீறிபாய்ந்து எவ்விதத்தும் அதைக் கெடுக்க முயல்வதும், அவையவைக்குத்தக்கபடி வசிப்பதற்கு இடங்களை ஏற்படுத்திக்கொள்வதும், புதிதுபுதிதாக பதார்த்தங்களை கண்டுபிடித்து ஆனந்திப்பதும், இவ்வகில் லோகங்களும். அண்டங்களும், அதனதன் ஸ்தானத்தில் ஆகாசத்தில் சுழண்டுவருவதும், ஒவ்வொரு அண்டங்களிலும், அங்குள்ள சீதோஷ்ண ஸ்திதிக் குத்தக்கவாறு, ஸ்தாவரங்களும், ஜங்கமங்களும் வெகு கிளர்ச்சியா யுண்டாவதும், அதுபோலவே நீரில் அநேக ஜந்துக்கள்தோன்றி, வெகு இனிமையுடன் வாழுவதும், இயற்கையாய் இருக்கும் கானகங்களில் பெருத்த விருக்ஷங்கள் ஒருவருடைய உதவியின்றி வளர்வதும், அவைகளுக்கும் ஆகாசத்தினின்று மழைத் துளிகள் விழுவதும், ஒவ்வொரு மலைகளில் வெகு ஆச்சரியமான குகைகள்இருப்பதும், நோக்குமிடத்து எவ்வளவு ஆச்சரியத்வதைக் கொடுக்கிறது. இவைகளெல்லாவற்றையும் நமதுகண்ணுக்கு பஞ்சபூதத்தை யன்றி வேறொன்றையும் காணோம். அப்பூதங்களின் சேர்க்கையாற்றான் இவ்வளவும்வளர்கிறதுஎன்பது ஒவ்வொருவரும் அறிந்தவிஷயம். பிரத்தியக்ஷமாய் இப்பூதங்களை கண்ணால் பார்த்து அதனதன் விசித்திரமானதொழிலையுங்கண்டு இவைகளுக்கு ஆதாரமான ஒருபெரியசக்தி இருக்கவேண்டுமென ஒவ்வொருவரும் சிந்திப்பதற்கிடமுண்டு. இச்

சன்னியாசிகள் கூட்டம் சிலகாலமாக தத்துவராய்ச்சியை இங்கிலீஷ் வழியாக வளர்த்து வருகிரது என்பது எல்லோரும் அறிந்தவிஷயம். மற்றும்பலவாருக இப்பொழுது எல்லாரும் கண் விழிக்கிருர்போல் தோன்றுகிறது. என்னவிழித்தாலும் ;பிராசீன மஹாத்மாக்கள் கருணையாலன்றி நாம் உஜ்ஜீவிக்க முடியாதென்பது திண்ணம். பிராசீன சம்பிரதாயப்படி உபநிஷன்மார்க்க பிரவர்த்தர்களாய பிரம்மவித்யாவைசெவ்வே பரிசிலனஞ் செய்தவராய், யோகசித்திகளை முறையே பெற்றவராய், ஆத்மாநுபூதி மேலிட்டவராய்க் கருணையங்கடலாய், திருஷ்டிபட்டவுடன் நமது மனதை ஆகர்ஷிக்கக்கூடியவராய், உலகத்து மாந்தர்கள் உஜ்ஜீவிக்க ஆவலுற்றவராய், ஈசுவராம்சமுடையவராய், ஒருவரேனும் நம் இந்தியாவில் இருந்தாலன்ருே இவ்வித்தியாவின் தத்துவாராய்ச்சிமேன்மேலும் விருத்தியாக வழியுண்டு. அப்பேர்பட்ட மஹாத்துமாக்கள் நம்தேசத்தில் இல்லாமல் போகவில்லை. இருந்தாலும் முமுக்ஷுக்கள் இல்லாத குறைவினலேயே அவர்களுடைய தெரிசனம் நமக்கு கிடைக்கிறதற்கு வழியில்லாமலிருக்கிறது. கூட்டம் கூட்டமாய் முமுக்ஷுக்கள் தத்துவாராய்ச்சியில், ஆவலுற்றசாதகப்புட்போல் காத்துக்கொண்டிருந்தால், அவர்களுக்கு உபதேசிக்கதயாராய் வருவார்கள். நாம் எவ்வளவுதான் பத்திரிகைள் விரித்து எழுதினலும் பயன்என்ன. அநேகர் பத்திரிகைகளை பிரித்துப்பாராமலே வைத்திருக்கிருர்கள். பிரித்துப் பார்த்தும் அநேகர் ஆலசியமாய் விடுகிருர்கள். மற்றும் சிலர், நம்தேசத்திற் குள்ளேயே இருக்கும் உண்மதச்சண்டைகளில் ஜாகருகர்களாய் கங்கணங் கட்டிக்கொண்டு, அதற்கென்றே பத்திரிகைகளைப் படிக்கிருர்கள். எந்த மதம் எப்படி இருந்தாலென்ன. இந்தியாவின் வேதத்தின் மதமானது எல்லாவற்றிற்கும் பொதுவாய் அனைத்தையும் தனது புத்திரர்கள் போல் பார்த்துக்கொண்டிருக்கிறது. நம்தேசத்தில் உண்மதச்சண்டைகளில் தலையிட்டுவிருதாகாலக்ஷேபஞ் செய்கிருர்கள். எவரெவருக்கு எந்த பக்குவமோ அந்த பக்குவப்படி வேதவிதி உபதேசிக்கிருர். சங்கார் நோக்கின காலத்து அவர் மனத்தின்பட்டபரமதத்துவத்தை தனதுசிஷர்களான முமுக்ஷுக்களுக்கு உபதேசித்தார். அத்ற்கு வெகுகாலத்துக்குப்பின், ராமானுஜர். மாதவர், வல்லபர், ஸ்ரீகண்டர் முதலிய அநேகர் ஒருமுறையான பக்குவருக்கு அவரவர்கள் தன் தன் மனத்தில்தோன்றிய பரமதத்துவங்களை உபதேசித்தார்கள். அவைகள் அவரவர்களுக்கு தக்கபடி உபதேசிக்கப்பட்டது. ஒவ்வொருவருக்கு தகுந்தபடி எப்படி உபதேசிக்கிரதென்ருல், ஈசுவரனை யடைய பலவழிகள் உலகத்தில் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் ஈசன் பிரசாதம் கிடைக்காமலா இருக்கிறது. உலகத்தில் தோன்றிய எந்த மதமானலும், அவையவைகளில் அதை யனுஷ்டிக்கிறவர்களுக்குத்தக்கபடி ஆசாரமும், பக்தியும், நிறைந்தே இருக்கிறது. ஆனதினல் எல்லா ஜீவன்களும் காயவசத்தால் முமுக்ஷுத்துவம் ஏற்பட்டு மோக்ஷம் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஒருவன் தான் வெகு பக்தியுடன் ஈசுவரனை எதாவது ஒருவழியாக வணங்கினல அவன் மோக்ஷமடைவான் என்பதில் ஐயமில்லை. இது நோக்கியே, எமது கருணைவள்ளலாகிய கண்ணபிரான், "[illegible]" என்ருர். ஆனதால் ஒருவரையொருவர் என் மதம் பெறிது, உன்மதம் சிறியதென்றுவாதிப்பது தத்துவாராய்ச்சி செய்யும் முமுக்ஷுக்களுக்கழகல்ல. இந்து மதத்திற்கும் அழகல்ல. நமது வேதமும் ஒருவரையும் கண்டிக்கவேயில்லை புராணங்களும் அவரவர்கள் நிலைமைக்குத்தக்கபடி கழறிற்றேயன்றி, சண்டையிட உபதேசிக்கவில்லை. ஆனதால்நமது முன்னேர்களாகிய மஹரிஷிகளின் மஹத்தானதத்துவாராச்சியில் நாம் தலையிட்டுமோக்ஷாபேக்ஷையுடையவராய் பரோக்ஷமாயாவது சாஸ்திரங்களை கற்றுணர்ந்தோமானல், நாளடைவில் மஹான் களின் கருணைக்குப்பாத்திரர்களாகி பரமகருணநிதியின் பரமபதத்தை பெறுவோம் என்பதில் ஐயமில்லை. ஆதித்தனது போக்குவரத்தால் நமது காலம் கவர்ந்து கொள்ளப்படுகிறது ஆனதால் ஒவ்வொரு நாழிகையையும் ஒவ்வொரு பெருங்காலமாக நினைத்து நமது வயிற்றுக் காரியத்துடன் தத்துவப்பயிற்சியையும் ஒரு காரியமாக்கிக் கொள்வோம்,

சுபம்.

சிந்தனைகளை மனத்திடத்து இடைவிடாது சிந்திப்பா
ஞானல், அவன் மனத்திலேயே ஏதேனும் ஓர் அபிப்பி
ராயம் தோன்றுமென்பதில் சிறிதும் தடையில்லை. இவ்
வபிப்பிராயங்களைபற்றிய பூர்விக ரிஷிகளும், தங்கள்
வெகுவிலாசமான மனத்திடத்து சிந்தித்து கடையில்
ஈசனருளால் தங்களுக்கிருந்த வெகு நுண்ணிய பெரி
யகருத்துகளை தாங்கள் சிஷர்களுக்கு உபதேசித்தார்
களென நமது உபநிஷத்துக்களால் தெரிந்து கொள்ளு
கிறோம். முன்னொருக்கால் 'சுவேதாசுவதரர்' எனும்
மஹாரிஷியின் சமூகத்தில்ஓர்பெரியமஹாரிஷிகளின் கூட்
டம் இருந்ததாக அவ்வுபநிஷத்தின் ஆரம்பத்தினால்
அறிகிறோம். அவர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி தங்கள்
கூட்டங்களில் தத்துவாராய்ச்சியின் நிமித்தம், அகில
ப்பிரப்பஞ்சத்திற்கும் ஆதாரமென்னவென்றுஆசங்கை
யை எழுப்பி, அதற்கு முறையேவந்த பதில்களைச் சிந்
தித்து அவைகளில் நுண்ணிய கருத்தே உபநிஷத்
தாக இப்பொழுது வழங்கப்படுகிறது. அதில் முதலில்
எடுத்தவுடன், "ப்ரஹ்மவாதிநோவதந்தி" என்றதனால்
" பிரம்ம வாதிகள் சொன்னார்கள் " என்று
பொருள் படுகிறது. பிரம்மவாதிகள் என்றால், இவ்வு
லககாரணத்தை நிஷ்டை கூடி கண்டறிந்து, இவ்வுலக
காரணம் எதுவோ, அதுவே நமக்கும் காரணமாய்,
விசாரித்தனவில் அதுவே நாமாய் விளங்குவோம் என்
று அதற்குத்தக்க முயற்சிகளைச் செய்து தன்னிலைமை
பெற்று சகத்திடத்துக்காருண்ணியத்துடன் நாம் பெ
ற்றவரும் பதவியை தமது சிஷர்களுக்கு சொன்னார்
கள். ஆனதால், அவர்கள் விசாரித்த நுண்ணறிவுக
ளையோஜிக்குமிடத்து ஜகத்துக்கு ஆதிகாரண வஸ்து
வாகிய பரதத்துவத்தின் கருணையால் தான் அவர்
கள் கண்டறிந்து இருக்கவேண்டுமே யன்றி வேறுவழி
யாவில்லை. அவர்கள் செய்துவந்த தத்துவாராய்ச்சி
யின் வலிமையைச் சிந்திக்குமிடத்து, ஒவ்வொருநிமி
ஷத்தையும் அதற்கென்றே உழைத்து வேறு தொழி
லில்லாமல் ஏகாந்தமான இடங்களில் தனிமையாய்
இருந்து சிந்தித்த அச்சிந்தனைகளைவுறுத்தி பல்லாயி
[illegible] வருஷங்களில்வண்படுத்தியருள் வள்ளலின் கிருபை
[illegible]ந்து மெய்ஞ்ஞான பேரருட்சிந்தாமணிகளாய்,
[illegible]யன்றும் கடலாய் பிரகாசித்தார்கள். ஆன
[illegible]மேயே நம்நாட்டில் தத்துவாராய்ச்சி நி
[illegible]ம் அவ்வழியில் ஒழுகிவருகிறோம் என்
[illegible]கம். தத்காலத்து நாகரீகம் தழைத்து இ
[illegible]ான்றிய நாள் 6000 வருஷந்தானுயிற்று

என்று பகற்கனவுகண்டு பிறகு அநேக பிரமாணங்க
ளாலும் இந்தியாவின் நுண்ணிய ஆராய்ச்சியினாலும்,
வெகுகாலமென்றும், தோன்றித்தோன்றி அழியுமென்
றும் கண்டறிந்து அது தான் பொய்யென்று நம்புவத
ற்கு தடையில்லாமையாலும் பூர்வத்தில் எழுதியிருக்
கும் தங்கள் பிரமாணநூலைத் திருத்திக்கொள்ள சமயம்
பார்த்துக் கொண்டிருக்கும் இங்கிலீஷ் பாதிரிகளின்தே
சத்திலும் தத்துவாராய்ச்சி மேற்பட்டு, ஜர்மன் தே
சத்துத் தத்துவாராய்ச்சி.கிரீக்தேசத்து ஆராயச்சி, இங்
கிலண்டு தத்துவாராச்சி எனபலகிளைகள் பிரிந்து அவ
ரவர்கள் தங்கள் மேன்மைபொருந்திய புத்தியாலும்
அநேக சாஸ்திரங்களாலும் சிந்தித்து கடைசியில் 19
வது நூற்றாண்டி (Ninetenth)ல் ஜர்மனிதேசத்தில்
வெளியான தத்துவாராய்ச்சியின் வெகுமேதாவிகளா
ன (Cont) காண்ட (Shopen her) ஷோப்பன் ஹர்
முதலானவர்களால் இந்தியா தேசத்து உபநிஷத்துக்
களை படித்ததினால், கண்டறிந்த தத்துவம் எழுதப்
பட்டிருக்கிறது. அதை அநேகர் மேன்மைபாராட்டி
க்கொண்டாடுகிறார்கள் என்பது பிரசித்தியன்றோ.
ஆனதினால் நமது ரிஷிகள் முன்னமேயே பெரியகேழ்
விகளுக்கெல்லாம் பதிலாக உபநிஷத்துக்களை அறிந்
திருக்கின்றார்கள். அவ்வுபனிஷத்துகள் அனாதிகாலந்
தொட்டு தன்மயமான அறிவால் பிரதிபாதிக்கப்பட்
டிருக்கிறதென்பதில் ஐயமில்லை.

இக்காலத்து இந்தியாவின் தத்துவாராய்ச்சியை
கவனிக்குமிடத்துமிக்கவிசனத்துக்குஇடமாகிறது. சா
ஸ்திரங்களை நாம் கண்டறிந்து அனுபவியாமல் பிறர் கை
யில் கொடுத்துவிட்டு அவர்களால் இடப்படும் பிச்சை
யை சாப்பிடும் காலமாய்விட்டது. அதையாவது சரி
யாக வாங்குகிறார்களா இல்லை. அதையும் முறையே
படிக்காது அங்கொன்று இங்கொன்று படித்துவிட்டு
அம்பலத்துக்கு வந்து விடுகிறார்கள். (M. R. Auiube
sent) சாஸ்வதியன்னபாய்என்னும் இங்கிலீஷ் தேசத்
துச் செலவிய ஒருத்தியின் கருணையாலும், அவ்வம்
மாளுக்கு முன்தோன்றியிருந்த (Madam Blaʌestky)
மாடம் பிளவஸ்ட்கி என்னும் சீமாட்டியானவள் இந்தி
யாவின் தத்துவாராச்சியைச் செய்து, உலகத்து ஓர்
பெரிய நன்மையான காரியத்தை இயற்றி அதைவிருத்
திசெய்வதற்குத் தக்கவராக அநேகரை ஏற்படுத்தி
அவ்வழியில் அநேகரைச் சேர்த்து வருகிறார்கள். நம்
தேசத்திலேயே (Vivakandas brother hood) என்று